**செய்தி வெளியீடு எண்: 73** **நாள்: 24.1.2008**

# தமிழ் வளர்ச்சித் துறை
# மாநில அளவிலான
# பள்ளி/ கல்லூரி மாணவர்களிடையே
# கவிதை / கட்டுரை / பேச்சுப்போட்டி
# செய்திக் குறிப்பு

மாணவர்களிடையே தமிழ்ப்பற்றையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் மாவட்டந்தோறும் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டு 11, 12ஆம் வகுப்புப் பள்ளி மாணவர்களிடையே ஆண்டுதோறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.1,000/– இரண்டாம் பரிசு ரூ.500/– என வழங்கப்படுகின்றன.

2007–08 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15அன்று அனைத்து மாவட்டங்களிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

இதேபோன்று, மாவட்ட அளவில் கல்லூரி மாணவ / மாணவியருக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு பரிசு ரூ.1000/– வழங்கப்பட்டு வருகிறது.

2007–08 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான போட்டிகள் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் நாளன்று நடத்தப்பட்டன.

மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றவர்களைக் கொண்டு தற்போது மாநில அளவிலான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 25.1.2008 அன்று சென்னை , எழும்பூர், அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடக்கின்றன. இப்போட்டியில் மாணவர்கள் 180 பேர் கலந்து கொள்கின்றனர்.

மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் வெற்றி பெறும் 3 மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பெறும். முதல் பரிசு ரூ.5,000/– இரண்டாவது பரிசு ரூ.3,000/– மூன்றாவது பரிசு ரூ.2,000/–மற்றும் சான்றிதழ் வழங்கப்பெறும். போட்டியில் கலந்து கொள்ளக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் இருவழிப்பயணக் கட்டணம் மற்றும் உணவு வசதி அளிக்கப்பெறும்.

அன்றே (25.1.08 பிற்பகல் ) சென்னை உலகப்பல்கலைக் கழகச் சேவை மையத்தில் 25.1.08 பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சியில் மாநிலப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற உள்ளன.

பரிசு வழங்கும் நிகழ்ச்சிக்குத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையேற்கவும் தமிழ் வளர்ச்சி , அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப. அவர்கள் சான்றிதழ் வழங்கி வாழ்த்துறை வழங்கவும் மாண்புமிகு திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் முனைவர் மு.நாகநாதன் அவர்கள் பரிசுப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கிச் சிறப்புரை வழங்கவும் கவிஞர் அறிவுமதி அவர்கள், திருமதி. சாந்தகுமாரி சிவகடாட்சம் அவர்கள் முனைவர் இராம. குருநாதன், கலைமகள் ஆசிரியர் திரு.கீழாம்பூர் ஆகியோர் பாராட்டுரை வழங்கவும் உள்ளனர். பரிசுப் பெறும் மாணவர்கள் மொத்தம் 18 பேர், இவர்களுக்கு வழங்கப்பெறும் பரிசுத் தொகை மொத்தம் ரூ.60,000/– ஆகும்

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**